ந.க.எண் 3637 / 2018 / தி4,

வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம்,
நாள் – 20.12.2024.

## கடிதக்குறிப்பு

பொருள் : சிறுபாலம் அமைக்க அனுமதி – வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் – திரு.C.சுப்ரமணியன் த/பெ. M.சின்னாகவுண்டர் என்பவருக்கு சொந்தமான – ப.விராலிப்பட்டி ஊராட்சி கிராம சர்வே எண் : 189/5 மற்றும் ப.விராலிப்பட்டி கிராம சாலை சர்வே எண் : 189 /7A2 –க்கு இடையே தனது சொந்த செலவில் சிறுபாலம் அமைக்க அனுமதி வேண்டி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது – அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. திரு.C.சுப்ரமணியன் த/பெ. M.சின்னா கவுண்டர், ஊத்தாங்கல் புதுப்பட்டி என்பவரது விண்ணப்பம் நாள் 20.12.2024.
2. வருவாய்த்துறை மற்றும் பதிவுத்துறை ஆவணங்கள்

********

பார்வை (1) இல் காணும் மனுதாரர் திரு. திரு.C.சுப்ரமணியன் த/பெ. M.சின்னா கவுண்டர் என்பவரின் விண்ணப்பத்தில், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம், ப.விராலிப்பட்டி கிராம ஊராட்சிக்குட்பட்ட சாலை புல எண் : 189 /7A2 மற்றும் திரு.C.சுப்ரமணியன் த/பெ. M.சின்னா கவுண்டர் என்பவருக்கு சொந்தமான சர்வே எண்: 189/5 –க்கு இடையே மனுதாரர்களின் சொந்த செலவில் இரு புறம் கரை போக மீதமுள்ள இடத்தில் 40 அடி நீளமும் 23 அடி அகலத்தில் சிறுபாலம் அமைப்பதற்கு அனுமதி வழங்கிடுமாறு கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

பார்வை (2) இல் காணும் வருவாய்த்துறை மற்றும் பதிவுத்துறை ஆவணங்களின் அடிப்படையில் வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம், ப.விராலிப்பட்டி ஊராட்சி சர்வே எண் : 189/5 நிலத்திற்கு செல்வதற்கு ஏதுவாக ப.விராலிப்பட்டி கிராம சாலை சர்வே எண் : 189 /7A2 –ல் இரு புறம் கரை போக மீதமுள்ள இடத்தில் 40 அடி நீளமும் 23 அடி அகலத்தில் மனுதாரர்களின் சொந்த செலவின் பேரில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சிறுபாலம் அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது.



Scanned with OKEN Scanner

நிபந்தனைகள்

1. சிறுபாலமானது ஓடையின் வழியாக மருகால் நீர் எளிதாக கடந்து செல்வதற்கு ஏதுவாக இரு புறம் கரை போக மீதமுள்ள இடத்தில் 40 அடி நீளமும் 23 அடி அகலத்தில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. சிறுபாலமானது 10 டன் எடையுள்ள வாகனங்கள் எளிதில் கடந்து செல்லும் வகையில் வலிமையானதாக இருக்க வேண்டும்.
3. மழைநீர் தடையின்றி எளிதில் கடந்து செல்லும் வகையில் சிறுபாலமானது கட்டமைக்க வேண்டும்.
4. சிறுபாலம் கட்டுமான பணிக்கு அரசு நிதியிலிருந்து எவ்வித ஒதுக்கீடும் செய்ய இயலாது. தங்கள் சொந்த செலவின் பேரிலேயே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
5. சிறுபாலம் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கும் போது பொது மக்கள் அறியும் வகையில் பணியின் தன்மை, அனுமதி, மதிப்பீடு, நீளம் மற்றும் அகலம் குறித்த பொது தகவல் பலகை கண்டிப்பாக நிறுவப்பட வேண்டும்.
6. சிறுபாலம் கட்டுமான பணிகள் முடிவடைந்தவுடன் ஊராட்சி ஒன்றிய அலுவலக பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும்.
7. சிறுபாலம் கட்டுமான பணிகள் தொடர்பான 3 நிலையிலான முழுமையான புகைப்பட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (பணி துவங்கும் முன்பு, பணி நடைபெறும் பொழுது மற்றும் பணி முடிவடைந்த பின்பு)
8. அரசுக்கு சொந்தமான இடத்தில் பாலம் கட்டுவதால் தங்களுக்கு சொந்தமானது என கருத இயலாது, பொது மக்கள் அனைவரும் பயன்படுத்த உரிமை உள்ளது.
9. மேலும், எதிர்வரும் காலங்களில் ஓடையின் வழியே இயற்கையாக நீர் செல்லும் வழிப்பாதையில் பாதிப்பு ஏற்பட்டாலோ நீதிமன்றம் அல்லது உயர் அலுவலர்களால் ஆக்கிரமிப்பு எனக்கருதி உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் சிறுபாலமானது எவ்வித முன் அறிவிப்பின்றி உடன் அப்புறப்படுத்தப்படும்.
10. மேற்காணும் நிபந்தனைகள் பின்பற்ற தவறினால் தங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன் அறிவிப்பின்றி உடன் ரத்து செய்யப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றிம்,
வத்தலக்குண்டு.

20.12.24

பெறுநர்
திரு.C.சுப்ரமணியன்
த/பெ. M.சின்னா கவுண்டர்
ஊத்தாங்கல் புதுப்பட்டி,
ஜி.தும்மலப்பட்டி ஊராட்சி.

G/Murugapandifiles/All letters/சான்று

Scanned with OKEN Scanner